உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 17.06.2026 • மலர் 04 • இதழ்: 168 • புதன்கிழமை • Edition : Nagercoil • 17.06.2026 • Vol : 04 • Issue : 168 • Page : 4 • Rs. 5/-

# ஸ்லோவாக்கியாவின் உயரிய விருது

## பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவம்

பிராட்டிஸ்லாவா, ஜூன் 17

பிரதமர் மோடி ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஸ்லோவாக்கியா நாட்டின் பிரடிஸ்லவா நகருக்கு சென்றடைந்தார். அந்த நாட்டுக்கு இந்திய பிரதமர் ஒருவர் செல்வது இதுவே முதல்முறை ஆகும். சுலோவாகியா நாட்டின் பிரதமர் ராபர்ட் பிகோவுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருதரப்பு உறவை விரிவான கூட்டாண்மை என்ற அந்தஸ்துக்கு தரம் உயர்த்த இருவரும் ஒப்புக்கொண்டனர். இரு நாட்டு பிரதமர்கள் முன்னிலையில், இந்தியா ஸ்லோவாக்கியா இடையே 11 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த நிலையில், பிரதமர் மோடிக்கு ஸ்லோவாக்கியாவின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டு உள்ளது. அதிபர் மாளிகையில் நேற்று நடைபெற்ற விழாவில், அந்நாட்டு அதிபர் பீட்டர் பெல்லெக்ரினி இந்த விருதை பிரதமர் மோடிக்கு வழங்கி சிறப்பித்தார்.



வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளால் பிரதமர் மோடிக்கு வழங்கப்படும் 33வது சர்வதேச விருது இது என்பது குறிப்பிடத்தக்கது.



## கோவை மாவட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கான அனுமதி ஆணை: கலெக்டர் வழங்கினார்

சேலம், ஜூன் 17

சமூக வலைதளம் வாயிலாக தகவல் பெறப்பட்டதின் அடிப்படையில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆனைமலை வட்டம். திவான்சாபுதூர் கிராமம். மீனாட்சிபுரம். மலைவாழ் பகுதியை சேர்ந்த, பார்வையற்ற மாற்றுத்திறனாளியான சுமதி,சித்ரா ஆகிய இரண்டு பயனாளிகளுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில்,வீட்டு மனைப் பட்டாக்கள் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தொல்குடி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான அனுமதி ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் முன்னிலையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மணிமேகலை,மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் வசந்தராம் குமார் பலர் கலந்து கொண்டனர்.

பழங்குடியினர் நலத்துறை சார்பில் தொல்குடித் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர்,தெரு விளக்குகள் மற்றும் நிரந்தர வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.தமிழ்நாடு முழுவதும் 400 நரிக்குறவர் பழங்குடியினர் மற்றும் 600 தரைப்பகுதி மற்றும் மலைப்பகுதியில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வீட்டற்ற இருளர் காடர், முதுவர், மலசர், மகாமலசர், காணி, பளியர், இரவலன், ஆதியன் மற்றும் இதர பழங்குடியினர் என மொத்தம் 1000 பழங்குடியினர்களுக்கு வீடுகட்டித் தரப்படவுள்ளது.

அதன்படி, இத்திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில், தரைப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினர்களுக்கு 54 வீடுகள் மற்றும் மலைப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினர்களுக்கு 136 வீடுகள் என மொத்தம் 190 இலவச வீடுகள் ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சமூக வலைதளம் வாயிலாக தகவல் கோரிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில் இரண்டு தினங்களுக்குள் ஆனைமலை வட்டம்,மார்ச்சநாயக்கன்பாளையம் உள்வட்டம். திவான்சாபுதூர் கிராமத்தில், சித்ரா க/பெ.மாரிமுத்து மற்றும்சுமதி க/பெ.பாப்பன் ஆகிய இருநபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட இடத்தில் தொல்குடி திட்டத்தின் கீழ் தலா ரூ.5.07 இலட்சம் மதிப்பீட்டில் 2 வீடுகள்கட்டுவதற்கான ஆணைகளைபிறபடுத்தப்பட்டோர் சம்பத்குமார் வழங்கினார். நலத்துறை அமைச்சர் அதனைத்தொடர்ந்து,பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளான இப்பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1250 மதிப்பில் 3 மடக்குச்சிகள், 2 கறுப்பு கண்ணாடிகளையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் வழங்கினார்.சித்ரா கண்பார்வையற்ற இரண்டு குழந்தைகளுக்கும்,மாற்றுத்திறனாளிகளுக்கான மாதந்திர உதவித் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

என் பெயர் சித்ரா,என் கணவர் பெயர் மாரிமுத்து.ஆனைமலை வட்டம்.காந்தி நகர்,கணபதிபாளையம்பகுதியில்வசித்து வருகிறேன். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நானும் குழந்தைகளும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள்.என் கணவர் தென்னை மரத்தில் இருந்து இளநீர் இறக்கம் வேலையை செய்கின்றார். எனது கணவரின் வருமானத்தின் மூலம் குடும்பத்தை நடத்தி வருகிறோம். எங்களுக்கு சொந்தமாக எந்தவொரு சொத்தும் கிடையாது. இலவச வீட்டுமனைப் பட்டாவேண்டி சமூக ஊடகம் வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் கோரிக்கை வைத்தோம். எங்கள் கோரிக்கையினை உடனடியாக ஏற்று,தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி,நாங்க இருக்கும் பகுதியிலே 2 செண்ட் நிலத்தை எங்களுக்கே பட்டா போட்டு கொடுத்திருக்காங்க.நான் வசிக்கும் இடத்திற்கு பட்டாவை கொடுத்து மட்டுமல்லாமல்,தொல்குடி திட்டத்தின் கீழ் ரூ.5.07 இலட்சம் வழங்கினார்.

ஆனைமலை வட்டம்,திவான்சாபுதூர் கிராமம்,மீனாட்சிபுரம்,மலைவாழ் பகுதியை சேர்ந்த,பார்வையற்ற மாற்றுத்திறனாளியான சுமதி,தெரிவித்தாவது,என் பெயர் சுமதி,என்னுடைய தம்பி மற்றும் அம்மாவுடன் ஆனைமலை வட்டம்,காந்தி நகர்,கணபதிபாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். என் தம்பி தினக்கூலி வேலைக்குதான் சென்றுவருகிறான். அவனது வருமானத்தில் தான் நான் வாழ்ந்து வருகிறேன். நான் பார்வையற்ற மாற்றுத்திறனாளி என்னால் வேலைக்கு போக இயலாது. எனக்கு ஒருமகள் இருக்கிறாள். அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது.



தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் இரண்டாம் கட்ட கலந்தாய்வு நடைபெற்றது. தேர்வு பெற்ற மாணவர்கள் சேர்க்கைக்கான கடிதத்தை கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் வழங்கினார். அருகில் சேர்க்கை குழு பேராசிரியர்கள் முனைவர் விஜயா தாமோதரன், முனைவர் விஜய தேவன் பிரபாகரன், மற்றும் உடற்கல்வி இயக்குனர் பாலமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.



## சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் அதிகாலையில் தீ பிடித்து எரிந்த விசைப்படகு

### தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர்

கன்னியாகுமரி,ஜூன்.17

கன்னியாகுமரி அருகே உள்ள சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் உள்ளது. இந்த துறைமுகத்தை தங்குதளமாககொண்டு350க்கும்மேற்பட்டவிசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் 61 நாட்கள் நீடித்த மீன்பிடி தடைக்காலம் கடந்த 14ம் தேதி நள்ளிரவு நிறை வடைந்தது. இதைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் சின்னமுட்டம் துறைமுகத்தில் இருந்து விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றன. முதல் நாளான நேற்று முன்தினம் 298 விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றன. இந்த விசைப்படகுகள் அனைத்தும் மீன் பிடித்து விட்டு, இரவு கரை திரும்பின.

இந்தநிலையில் நேற்று 2வது நாளாக கடலுக்கு மீன் பிடிக்க விசைப்படகு மீனவர்கள் தயாராகினர். அதிகாலை முதல் ஏராளமான விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க புறப்பட்டு சென்றன. அப்போது சின்ன முட்டம் சிங்காரவேலன் தெருவை சேர்ந்த டென்சன் என்பவருக்கு சொந்தமான கப்பல் மாதா என்ற விசைப் படகில் அதிகாலை 5 மணியளவில் 20 மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல தயாரானார்கள். விசைப் படகுஓட்டுனர்ரவீண்டன்படகைஇயக்கமுயற்சித்தார். அப்போது விசைப்படகில் இருந்த பேட்டரி சத்தத்துடன் வெடித்து சிதறி தீப்பிடித்தது எரிந்தது. இதையடுத்து படகில் இருந்த 20 மீனவர்களும் கடலில் குதித்தனர். அவர்கள் கடலில் நீந்தி கரைக்கு வந்து சேர்ந்தனர்.

விசைப்படகில் பற்றி எரிந்த தீயை அணைக்க முயன்றனர். ஆனால் தீயை அணைக்கமுடியவில்லை. அதிகாலை நேரத்தில் காற்று அடித்ததால் தீ படகு முழுவதும் பரவி கொளுந்துவிட்டு எரிந்தது. ஆகவே தீ விபத்து குறித்து கன்னியாகுமரி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் கன்னியாகுமரி தீயணைப்பு நிலைய தீயணைப்பு அலுவலர் சுரேஷ் சந்திரகாந்த் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். விசைப்படகில் பிடித்த தீ மேலும் பரவாமல் போராடி அணைத்தனர். இருப்பினும் அந்த விசைப்படகு முற்றிலுமாக எரிந்து சேதமடைந்தது.

இந்த தீவிபத்து பற்றி தகவல்அறிந்ததும் கன்னியாகுமரி துணை போலீஸ் சூப்பிரண்டு ஜயச்சந்திரன், இன்ஸ்பெக்டர் சுந்தர ராஜ பெருமாள் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும் சின்னமுட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தீயணைப்பு வீரர்கள் விரைத்து செயல்பட்டு விசைப்படகில் பிடித்த தீயை அணைத்ததால். சின்ன மூட்டம் துறைமுகத்தில் சிறுத்தப்பட்டிருந்த மற்ற படகுகளுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

## சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற 1435 பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)



சேலம், ஜூன் 17

ஒரு வருவாய் கிராமத்தில் 1 வருடத்தில் பெறப்பட்ட வருவாய் இனங்களுக்கான நிலவரி, தண்ணீர் வரி, கூடுதல் தண்ணீர் வரி, மீன் வள வாடகை, விற்பனை மற்றும் 2. சி பட்டா மர வரி மற்றும் இதர கணக்குகளை கிராம நிர்வாக அலுவலர்கள் அப் பசலியின் இறுதிக்குள் சமர்ப்பிக்க ஜமாபந்தி முறை முன்னுரிமை தருகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 16.06.2026 முதல் 24.06.2026 வரை 1435 பசலிக்கான வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ளது. இதில் பொதுமக்கள் பட்டா மாறுதல், இலவச வீட்டு மனை பட்டா, வாரிசு சான்று, பிறப்பு மற்றும் இறப்புச் சான்று, குடும்ப அட்டை, சாதி சான்று, வருமானச் சான்று, முதல் பட்டதாரி சான்று,

இருப்பிட சான்று, ஆதரவற்ற விதவை சான்று, கணினி சிட்டா பெயர் திருத்தம், மின்சார இணைப்பு, முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளி உதவித் தொகை, விதவை உதவித்தொகை, நில அளவை, குடிநீர், பொது சுகாதாரம், தெரு விளக்கு, சாலை வசதி, பசுமை வீடு, சிறு குறுவிவசாயிசான்று,அரசுபுறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் இதர மனுக்களையும் விண்ணப்பித்து பயன்பெற வழிமுறை செய்யப்பட்டுள்ளது. ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று 16.6.20026, 17.6.20026 மற்றும் 18.6.2026 ஆகிய நாட்களில் நடைபெறுகிறது. இன்றைய வருவாய் தீர்வாயதில் இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டைகள், வாரிசு சான்றிதழ் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு மனுக்களை பெற உள்ளது. அதன்படி இன்றைய தினம் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஓமலூர் குறுவட்டம் உமாரமங்கலம் கிராமத்திற்கு உட்பட்ட பி. காளிப்பட்டி, கட்ட பெரியாம்பட்டி, உமாரமங்கலம், கருப்பணம்பட்டி, டி. மாரமங்கலம் கிராமத்திற்கு உட்பட்ட டி. மாரமங்கலம், தொளசம்பட்டி, குக்கிராமங்கள், பெரியேரிப்பட்டி, ரெட்டிபட்டி குக் கிராமங்கள், பச்சனம்பட்டி கிராமத்திற்கு உட்பட்ட திண்டமங்கலம், பச்சனம் பட்டி குக்கிராமங்கள், எம். செட்டிப்பட்டிகிராமத்திற்கு உட்பட்ட எம் .செட்டிப்பட்டி, சிக்கனம்பட்டி குக் கிராமங்கள். பல்பாக்கி, காமலாபுரம், கோட்ட மேட்டுப் பட்டி, குள்ளம நாயக்கன்பட்டி குக்கிராமங்கள் மற்றும் கருப்பூர் குறுவட்டம் சக்கரசெட்டிப்பட்டி, கிராமத்திற்கு உட்பட்ட சக்கரசெட்டிபட்டி மற்றும் கோபிநாதபுரம் ஆகிய குக்கிராமங்களுக்கு நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் உதவித்தொகை, வகுப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 288 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு தகுதியுடைய மனுக்கள் மீது உடனடி தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று சேலம் மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து வருவாய் தீர்வாய ங்களிலும் தொடர்புடைய அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது தனி கவனம் செலுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நில அளவை கருவிகளை பார்வையிட்டார். அதை தொடர்ந்து தோட்டக்கலைத்துறை, வேளாண்மை துறை மற்றும் புதிய வேளாண் பொறியியல் துறை ஆகிய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# ஊத்துமலையில் சட்டமன்ற உறுப்பினர் கிளை அலுவலகம் திறப்பு

## இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை பங்கேற்பு



தென்காசி,ஜுன்.17

தென்காசி மாவட்டம் ஊத்துமலையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் கிளை அலுவலகம் திறப்பு விழாவில் இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை கலந்து கொண்டார்.

தென்காசி தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட மருத்துவர் கலைகதிரவன் தான் வெற்றி பெற்றதும் ஊத்துமலை பகுதி மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் ஊத்துமலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறக்கப்படும் என உறுதியளித்திருந்தார். அதன்படி சட்டமன்ற உறுப்பினர் கிளை அலுவலகம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது. திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை,மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் வக்கீல் சிவபத்மநாதன் முன்னிலை வகித்தனர். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைகதிரவன் எம்.எல்.ஏ. வரவேற்று பேசினார். ஆலங்குளம் யூனியன் சேர்மனும், மாவட்ட மகளிரணி அமைப்பாளருமான திவ்யா மணிகண்டன் அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள்அன்பழகன், சேக்முகமது, ஜேசுராஜன், முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் அண்ணாமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் பால்துரை, வள்ளியம்மாள் முருகேசன், துணை சேர்மன் ராஜாமணி, கவுன்சிலர் அந்தோணிசாமி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரன். ஊத்துமலை செயலாளர் ராமச்சந்திரன், தங்கம், ராஜா, முருகையா, லட்சுமணன், அரிராம் சேட், கணபதி, மாடசாமி, திருமலை குமார், செல்வகுமார், வனராஜ், அரசு ஒப்பந்ததாரர் மணிகண்டன், ஐவேந்திரன், மாணிக்கராஜ்,

மாணிக்கம், சபரி ராஜன், மருதப்ப பாண்டியன், விவசாய சங்கம் மாடசாமி, இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் மற்றும் திமுக, கூட்டணி கட்சி நிர்வாகிகள்,பொதுமக்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# வாக்குப்பதிவின்போது பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களில் இருந்து காகிதச்சுருள் நீக்கம்



சேலம், ஜூன் 17

சேலம் மாவட்டத்தில் சட்டமன்ற பொது தேர்தல் 2026 வாக்குப்பதிவின் போது பயன்படுத்தப்பட்ட சின்னம் காட்டும் இயந்திரங்களில் இருந்து தெர்மல் காகித சுருள், முகவரி தாள்கள் நீக்கம் செய்யும் பணி மற்றும் காலாண்டு தணிக்கை மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 க்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குப்பதிவின்போது சேலம் மாவட்டத்தில் உள்ள 3469 வாக்கு சாவடிகளில் 3492 சின்னம் காட்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்திய தேர்தல் ஆணைய உத்தரவின்படி வாக்குப்பதிவின் போது சின்னம் காட்டும் இயந்திரங்களில் இருந்த காகித சுருள், முகவரி தாள்கள் நீக்கம்செய்யும்பணிமற்றும்காலாண்டு தணிக்கை மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. மேலும் தெர்மல் காகித சுருள் மற்றும் முகவரி தாள்கள் நீக்கம் செய்து மீண்டும் பழைய நிலையில் வைக்கப்பட்டுள்ளது .



தருமபுரி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக ஏ கே அருண் கபிலன் (SP) நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் தமிழ்நாடு கேடர் IPS அதிகாரி, முன்பு பல்வேறு காவல்துறை பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

# திருச்சி பள்ளி வேன் மோதி சைக்கிளில் சென்ற சிறுவன் பலி



திருச்சி, ஜூன் 17

திருச்சி ஏர்போர்ட் திலகர் தெருவைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவர் சுரேஷ், தனது சைக்கிளில் புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த போது, பள்ளி வேன் மோதி பலத்த காயமடைந்தார். அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த மாணவர் குறித்து ஏர்போர்ட் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# துவரங்குறிச்சி பள்ளி அருகே பிடிபட்ட 10 அடி நீள மலைப்பாம்பு

திருச்சி, ஜூன் 17

திருச்சி மாவட்டம் துரங்குறிச்சி அருகே உள்ள தெத்தூர் அரசு தொடக்கப்பள்ளி அருகே 10 அடி நீள மலைப்பாம்பு இருந்ததாக பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில், துவரங்குறிச்சி தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். பாம்பு பிடிப்பான் உதவியுடன் பாம்பை லாவகமாகப் பிடித்த அவர்கள், வனத்துறையிடம்ஒப்படைத்தனர். வனத்துறையினர் அந்தப் பாம்பை அடர்ந்த வனப்பகுதியில் கொண்டு சென்று விட்டனர்.



# திருச்சியில் தனியார் பாரை மூடக்கோரி ஆர்ப்பாட்டம்

திருச்சி, ஜூன் 17

திருச்சி திருவானைக்காவலில் அகிலாண்டேஸ்வரி கோவிலுக்குச் சொந்தமான இடத்தில், அரசு விதிமுறைகளுக்கு மாறாக, விபத்து அதிகம் ஏற்படும் கொள்ளிடம் பைபாஸ் சாலையில் 'ஸ்கை 1111' என்ற தனியார் மது பார் செயல்பட்டு வருவதைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.சமீபத்தில்இந்தபாருக்கு அருகே இரு இளைஞர்கள் விபத்தில் சிக்கி பலியான பின்னரும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததை கட்சி வலியுறுத்தியது. உடனடியாக இந்த பாரை மூடக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# விளாத்திகுளம் அருகே சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவிலில் ஆனிமாத மகா வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா

விளாத்திகுளம் ஜூன் 17.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளியம்மன் காளிபராசக்தி வசித்த பீடத்தில் ஆனி மாத வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா மகாயாகம் நடைபெற்றது. வேள்வி விழா மகாயாக சாலையில் நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பழ வகைகள்,உணவு தானியங்கள், உடைகள்,குழந்தை தொட்டில், கல்உரல், அம்மி,மாங்கல்யம், உணவு ஆகியவற்றை நடைபெற்ற மகாயாக சாலையில் செலுத்தி வழிபாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது, பின்னர் 42 அடி உயரம் கொண்ட வெட்காளியம்மனுக்கு பல பாலாபிஷேகம் மற்றும் எலுமிச்சைமாலை அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. ஆனி மாத இருமுடி விழாவிற்கு வருட வருடம் பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருவதால், முதற்கட்டமாக கிருஷ்ணகிரி, திருவள்ளூர்,வேலூர்திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து முதற்கட்டமாக சுமார் 1000க்கும் மேற்பட்ட விரதம் இருந்து காப்பு கட்டி இருமுடி கட்டி வந்த பக்தர்கள் பம்பை வாத்தியத்துடன் தங்களின் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

# கடலாடி அருகே ஆப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி பவித்ரா சென்னை ஐஐடியில் இடம் பிடித்து சாதனை



கடலாடி ஜூன் 17,

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி அருகே உள்ள ஆப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி பவித்ரா, சென்னை ஐஐடியில் (IIT Madras) இடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்தச் சாதனையைப் பாராட்டும் வகையில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாணவி பவித்ராவை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்தார். மேலும், மலர்க்கொத்து வழங்கி அவரது உயர்கல்விப் பயணம் சிறக்க மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அப்போது பேசிய மாவட்ட ஆட்சியர் சிவகுருபிரபாகரன்அவர்கள்,கிராமப்புற மாணவர்களும் தங்களது விடாமுயற்சி, கடின உழைப்பு மற்றும் தன்னம்பிக்கையால் நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் இடம் பெற்று சாதிக்க முடியும் என்பதற்கு மாணவி பவித்ரா சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார் என்று பாராட்டினார்.

மேலும், சென்னை ஐஐடியின் முன்னாள் மாணவரான மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் அவர்கள், தாம் பயின்ற கல்வி நிறுவனத்திலேயே தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் இடம் பெற்றிருப்பது பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிப்பதாக தெரிவித்தார். மாணவி பவித்ராதனது எதிர்கால கல்விப் பயணத்திலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து மாவட்டத்திற்கும் மாநிலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் வாழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாக அலுவலர்கள், மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு மாணவியை வாழ்த்தினர்.

# தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு



தருமபுரி ஜூன் 17

தருமபுரி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகவளாகத்தில் உள்ள அதியன் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கி உறுதிமொழியை வாசிக்க அரசுதுறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பின் தொடர்ந்து வாசித்து உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தையொட்டி நடைபெற்ற கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவிய போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற தருமபுரி ஔவையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் இலக்கியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை சார்ந்த ஒன்பது மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களை ஆட்சியர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் செல்வி, மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், மாவட்ட சமூக நல அலுவலர் பவித்ரா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாலக்கோடு பேரூராட்சியின் மூலம் விவசாய நிலங்களில் கொட்டப்படும் கழிவுகளை அகற்ற வலியுறுத்தல்



தருமபுரி ஜூன் 17

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சுற்றுவட்டார பகுதிகளில் பாலக்கோடு பேரூராட்சியின் மூலம் எடுக்கப்படும் குப்பைகளை பொப்புடி செல்லும் வழியில் பாலக்கோடு பேரூராட்சிக்கு உட்பட்ட குப்பை கழிவுகளை பிரித்து எடுக்கும் கூடம் உள்ளது . அங்கு முறையாக குப்பைகளை பிரித்து எடுக்காமல் மொத்த குப்பைகளையும்அருகில் உள்ள விவசாய நிலங்களில் கொட்டப்பட்டுள்ளதாக அங்கு உள்ள ஊர் பொதுமக்கள் பாலக்கோடு பேரூர் கழக செயலாளர் விக்னேஷ்யிடம் புகார் தெரிவித்தனர். அது சம்பந்தமாக தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் உடன் சென்று களத்தில் நேரடியாக பார்வையிட்டதில் சுமார் ஒரு ஆயிரம் லோடுக்கு மேலாக மருத்துவக் கழிவுகள் மற்றும் கண்ணாடி துண்டுகள் மற்றும் பிளாஸ்டிக் பேப்பர்கள் மற்றும் குப்பைகள் அனைத்தும் அப்படியே சுத்திகரிக்கப்படாமல் விவசாய நிலங்களில் கொட்டப்பட்டுள்ளது தெரியவந்தது .

அருகில் இருக்கும் பொதுமக்கள் விவசாய நிலங்களில் குப்பைகள் பறந்து சென்று விழுவதால் விவசாயம் பாதிக்கப்படுவதாக மிகவும் வேதனையுடன் தெரிவித்துள்ளனர். எனவே மாவட்ட நிர்வாகம் மற்றும் பாலக்கோடு பேரூராட்சியில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஊழியர்கள் உடனடியாக குப்பை கழிவுகளை அகற்றி தருமாறு ஊர் பொதுமக்கள் மற்றும் பாலக்கோடு பேரூராட்சி தமிழகவெற்றிக்கழகசார்பில்கோரிக்கை விடுத்தனர்.

# நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை: கலெக்டர் எச்சரிக்கை



நாகர்கோவில், ஜூன்.17

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய மராமத்து பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து கலெக்டர் கூறியதாவது:

குழித்துறை சந்திப்பில் நெடுஞ்சாலை பகுதிகளில் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் தேங்கியிருப்பதால், அவற்றை உடனடியாக சீர்படுத்திட பொதுமக்கள் கோரிக்கை வைத்தன் அடிப்படையில் போர்கால அடிப்படையில் இப்பணிகளை மேற்கொள்ள நகராட்சி செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் ரூ.14.50 கோடி மதிப்பில் மார்த்தாண்டத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நவீன தினசரி காய்கறி சந்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தற்காலிகாக கடைகள் அமைத்து காய்கறி விற்பனை செய்வோரை புதிய நவீன சந்தையில் காய்கறி விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி மண்டல இயக்குநர் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிபா வைரஸ் பற்றி யாரும் அச்சப்பட தேவையில்லை. இருந்தாலும் முன்நடவடிக்கையாக கேரளாவிலிருந்து வரும் வாகனங்களை சோதனை சாவடிகளில் ஆய்வு மேற்கொள்ள காவல்துறை மற்றும் சுகாதாரத்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டஉள்ளது. இவ்வாறு கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தினை திடீர் ஆய்வு மேற்கொண்டு, பேருந்து நிலையத்தில் பயணிகளுக்காக கட்டப்பட்டுள்ள கழிப்பறை, அம்மா உணவகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, பொதுமக்களிடம் உணவின் தரம் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் குழித்துறை அரசு மருத்துவமனையினை திடீர் ஆய்வு மேற்கொண்டு, முழு சுகாதாரத்துடன் இருக்கின்றதா எனவும், நோயளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் நகராட்சி மண்டல இயக்குநர் நகைந்திரன், மண்டல செயற்பொறியாளர் த சணல்குமார், குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன். ஆசைதம்பி, குழித்துறை நகராட்சி ஆணையாளர் (பொ) குறள்செல்வி, நகர் மன்ற பிரதிநிதிகள், உதவி செயற்பொறியாளர்கள், பொறியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், ஓசூர் உள்வட்டத்திற்குட்பட்ட 27 கிராமங்களுக்கான 1435 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி இரண்டாவது நாள் நிகழ்ச்சியில், ஓசூர் ஏ.எஸ்.டி.சி. ஹட்கோ சேர்ந்த .யுவராஜன் என்பவரது மகன் .சந்தேஷ் சூர்யா ஜே.இ.இ.முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்று கலந்தாய்வில் கலந்துகொள்ளவுள்ளதால், சாதிச்சான்றிதழ் வேண்டி மனு அளித்ததின்பேரில் உடனடி நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சாதிச்சான்றிதழை வழங்கினார். உடன், தனி வட்டாட்சியர் .குருநாதன், வட்டாட்சியர் .ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# அழிக்கால் கடற்கரை கிராம மக்களுடன் கலெக்டர் சந்திப்பு; குறைகளை கேட்டறிந்தார்

நாகர்கோவில், ஜூன்.17

கணபதிபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட அழிக்கால் கடற்கரை பகுதிகள் மீனவ மக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் நேற்று நேரில் சந்தித்து அவர்களின் அடிப்படை தேவைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் பருவமழை மற்றும் கடல்சீற்றம் காரணமாக கணபதிபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட அழிக்கால் கடலோர கிராமத்தில் தெருக்கள் மற்றும் வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்தது. கடல் நீர் உட்புகுவதால் பொதுமக்கள் மற்றும் மீனவ மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், தற்போதைய நிலவரம் மற்றும் கள சூழ்நிலைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மீனவர்களிடம் கேட்டறியப்பட்டது.

மேலும், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கடல்சார் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி கடல் நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கீழ் சுழற்சி நிதியின் மூலம் சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் "கடல்சார் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தற்போது நிலவும் கடல் நீர் உட்புகுதல் பிரச்சினையின் தீவிரத்தையும், பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும் கருத்தில் கொண்டு, ஆய்வுப் பணிகளை விரைந்து முடித்து, தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, திட்டப் பணிகளை விரைவாக செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளும் மற்றும் ஆதரவுகளும் வழங்கப்படும். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் கோபிநாத், மீன்வளத்துறை செயற்பொறியாளர் பிரேமலதா, உதவி இயக்குநர் தீபா, விர்ஜில் கிராஸ், கணபதிபுரம் பேரூராட்சி தலைவி ஸ்ரீவித்யா, உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




## ஆதி பவுண்டேஷன் சார்பில்


# 2026க்கான செங்குருதிச் செம்மல் விருது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்

தர்மபுரி ஜூன் 17

தர்மபுரியில் வருடம் தோறும் ஆதி பவுண்டேஷன் சார்பில் செங்குருதி தமிழ் விருது வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும் தர்மபுரியில் உள்ளமதுராபாய்திருமணமண்டபத்தில் செங்குருதி செம்மல் விருது வழங்கும் விழா நடைபெற்றது. உலக ரத்ததான தினத்தை முன்னிட்டு ரமேஷ் என்பவருக்கு, சுமார்45முறைரத்ததானம் கொடுத்துள்ள குருதிக்கொடையை பாராட்டி ஆதி பவுண்டேஷன் சார்பில் தர்மபுரிமுன்னாள்சட்டமன்றஉறுப்பினர் வெங்கடேஸ்வரன் கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் அவர் பேசுகையில், தானத்தில் சிறந்த தானம் ரத்ததானம், அனைவரும் தவறாமல் பிறருக்கு உதவும் வகையில் ரத்த தானத்தை வழங்கி மற்றவர்களின் உயிரை காக்கும் விதத்தில் செயல்பட வேண்டும் எனவும், பிறருக்கு ரத்தம் கொடுப்பதால் நமது உடலில் ரத்தம் அதிகரிக்குமே தவிர குறையாது என்றும் பேசினார்.

# ரெயின்போ மருத்துவமனை பிறந்த குழந்தைகளுக்கான "அசண்ட் " சிறப்பு மருத்துவ மையம் திறப்பு




சென்னை, ஜூன் 17

குழந்தைகளுக்கு அதிநவீன மருத்துவ சேவையை அளிக்கும் விதமாக, சென்னை ரெயின்போ குழந்தைகள் மருத்துவமனை அசண்ட் (ACENT ) என்னும் பிறந்த குழந்தைகள் சிறுவர்களுக்கான செவித்திறன், சுவாசப் பாதை தூக்கக் குறைபாடுக ளுக்கான சிறப்பு மருத்துவ மையம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இம்மையத்தின் அறிமுக விழாவில், பிரபல பின்னணிப் பாடகி சைந்தவி மற்றும் திருவனந்தபுரம் கிம்ஸ்ஹெல்த் மருத்துவமனையின் இ .என்.டி மூத்த நிபுணர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சுரேஷ் குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

குறிப்பாக, புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் சுவாசப் பாதையை மயக்க மருந்து கொடுக்காமல் பரிசோதிக்க, மிக மெல்லிய 1.2 மி.மீ குழந்தைகளுக்கான எண்டோஸ்கோப்புகளைப் பயன்படுத்தும் சென்னையின் முதல் மையம் அசண்ட் ஆகும். இந்த தொழில்நுட்பம், புறநோயாளிகள் பிரிவிலேயே மிகச் சிறிய சுவாசப் பாதைகளைக் கூட மருத்துவர்கள் பாதுகாப்பாக பரிசோதிக்க உதவுகிறது.

இதனால் சிக்கலான இ.என்.டி பிரச்சனைகளை முன்கூட்டியே கண்டறிந்து உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடிகிறது. இது குறித்து சென்னை ரெயின்போ குழந்தைகள் மருத்துவமனையின் குழுமத் தலைவர் குணசேகர் கூறுகையில், "எங்கள் மருத்துவமனையில், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த நிபுணர்களின் ஆதரவுடன் குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சையை வழங்குவதே எங்களது முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. இந்த "அசண்ட்" மையம் அறிமுகம் என்பது, குழந்தைகளுக்கு ஒரே இடத்தில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சையை வழங்க வேண்டும் எங்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது நோயைக் கண்டறிவது மற்றும் சிகிச்சை அளிப்பதில் தொடங்கி, குணமடைவது மற்றும் மறுவாழ்வு அளிப்பது வரை, இந்த மையத்தின் ஒவ்வொரு அம்சமும் குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் தனித்துவமான தேவைகளை மனதிற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும் குழந்தைகளுக்கான இ.என்.டி நிபுணர் மற்றும் டாக்டர். நித்யா கூறுகையில், "குழந்தைகளுக்கு ஏற்படும் பல இஎன்.டி பிரச்சனைகள் பெரும்பாலும் தற்காலிகமானவை என்று அலட்சியப்படுத்தப்படுகின்றனர். ஆனால் உண்மையில் அவை குழந்தையின் செவித்திறன், பேச்சு, தூக்கம், கற்றல் மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சியில் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இந்தப் பிரச்சனைகளை எவ்வளவு சீக்கிரம் கண்டறிகிறோமோ, அந்த அளவுக்கு நம்மால் சிறந்த சிகிச்சையை அளித்து நல்ல முடிவுகளைக் கொண்டுவர முடியும் என்று தெரிவித்தார்.

# பெரும் பள்ளம் அடுக்கு மாடி குடியிருப்பு வீடுகளை தகுதியானவர்களுக்கு ஒதுக்க வேண்டும்

## ஈரோடு ஆட்சியரிடம் மனு



ஈரோடு ஜூன் 17

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தலைமையில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. அப்போது ஈரோடு மாநகராட்சி திமுக மண்டலதலைவர் சசிகுமார் தலைமையில் ஏராளமான பேர் கலெக்டர் கந்தசாமியிடம் ஒரு மனு கொடுத்தனர். அதில் கூறியிருப்பதாவது ஈரோடு பெரும் பள்ளம் ஓடை பகுதி யில் வீட்டு வசதி வாரியம் சார்பில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இங்கு ஒதுக்கப்பட்டு உள்ள ஒதுக்கீட்டாளர்கள் தங்களது பெற்றோர் மற்றும் உறவு முறை சான்றிதழ்கள் வாங்குவதில் கால தாமதமும் சிரமமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வருகிற 19 ந் தேதிக்குள் இந்த வீடுகள் ஒதுக்கீடு செய்வதற்கு கால அவகாசம் கொடுத்து உள்ளது. இந்த கால கட்டத்துக்குள் 30 க்கும் மேற்பட்டவர்கள் உரிய சான்றிதழ் பெற முடியாமல் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். இதனால் இந்த ஒதுக்கீடு ரத்து செய்யும் சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த 30 க்கும் மேற்பட்டவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்வதற்கு கால அவகாசம் கொடுத்து அவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்யும் படி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆரல்வாய்மொழி கூட்டுறவு வங்கியில்

# ரூ 2.65 கோடி மோசடி; எழுத்தர் கைது - மேலும் 6 பேருக்கு வலை

நாகர்கோவில், ஜூன். 17

ஆரல்வாய்மொழி கூட்டுறவு வங்கியில் கடந்த 2017 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் போலி தங்க நகைகளை அடகு வைத்து சுமார் 2 கோடி 65 லட்ச ரூபாய் வரை மோசடி செய்யப்பட்டது கூட்டுறவுத் துறை தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடி குறித்து கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் முருகேசன் நாகர்கோவில் பொருளாதார குற்றப்பிரிவு போலீசில் புகார் செய்தார். அவரது புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் நடத்திய முதல் கட்ட விசாரணையின் அடிப்படையில் இந்த மோசடியில் தொடர்புடைய கூட்டுறவு வங்கியின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வங்கியின் எழுத்தாளரான முத்துகிருஷ்ணன் என்பவரை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் நேற்று கைது செய்தனர். அவரிடத்தில் ரகசிய இடத்தில் வைத்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் 6 பேரை தனிப்படை அமைத்து போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இதற்கு இடையில் இந்த மோசடியில் வேறு சில ஊழியர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், கூட்டுறவு வங்கியில் மேலும் சில ஊழியர்களை பிடித்து பொருளாதார குற்றவியல் போலீசார் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளனர். கூட்டுறவு வங்கியில் நகை கடன் மோசடி நடந்துள்ள சம்பவம் அப்பகுதி மக்களிடையேயும், கூட்டுறவு சங்க வட்டாரத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# த மா கா பொது செயலாளர் யுவராஜா திடீர் விலகல்

## த வெ கா வில் இணைகிறாரா?



ஈரோடு ஜூன் 17

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி பொது செயலாளர் யுவராஜா. ஈரோட்டை சேர்ந்த இவர் த மா கா இளைஞர் அணி பொது செயலாளர் பதவியில் இருந்தும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகுவதாக கட்சியின் தலைவர் ஜி கே வாசனுக்கு கடிதம் எழுதி உள்ளார். இவர் இதுவரை ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மேற்கு தொகுதியில் 2 முறையும் மொத்தம் 3 தடவை தேர்தலில் போட்டியிட்டு 3 தடவையும் தோல்வியை தழுவினார். இந்த முறை ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிட்டு 3 வது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

யுவராஜா கடந்த முறை ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய போது அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார் அப்போதே இவர் அதிமுகவில் சேரப்போவதாக பரவலாக பேச்சு அடிபட்டது. பிறகு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி கே வாசன் சமாதானம் செய்ததால் அந்த முடிவை கைவிட்டு த மாகாவில் தொடர்ந்து பணியாற்றியதாக கூறப்பட்டது இந்த நிலையில் கடந்த சட்டமன்ற தேர்தலில் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட யுவராஜா வாய்ப்பு கேட்டு இருந்தார். இதை யொட்டி அவர் கிழக்கு தொகுதியில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பொது மக்களுக்கு வழங்கினார். ஆனால் அவர் எதிர்பார்த்த படி கிழக்கு தொகுதி ஒதுக்கப்படாமல் மேற்கு தொகுதி ஒதுக்கப்பட்டது. இதனால் வேறு வழியின்றி மேற்கு தொகுதியில் போட்டியிட்டார். அப்போதே கட்சி தலைமை மீது அவருக்கு அதிருப்தி ஏற்பட்டது.

இந்த நிலையில் இப்போது மேற்கு தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய யுவராஜா த மா கா உறுப்பினர் மற்றும் கட்சிப் பதிவியிலிருந்தும் விலகுவதாக கூறி இருப்பது கட்சியினரிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அவர் த வெ கா வில் இணைய உள்ளதாகவும் பரபரப்பாக பேச்சு அடிபடுகிறது.

## நித்திரவிளை அருகே

# திருமணமான 6 மாதத்தில் புதுப்பெண் மாயம்

மார்த்தாண்டம், ஜூன்.17

நித்திரவிளை அருகே உள்ள சின்னத்துறை ஜூட்ஸ் காலனி பகுதியை சேர்ந்தவர் ஜெர்பின் (32). இவர் மீன்பிடித் தொழிலாளி. இவருக்கும் இரவிபுத்தன்துறை பகுதியை சேர்ந்த சுபினா ( 24) என்பவருக்கும் கடந்த ஜனவரி மாதம் திருமணம் நடந்தது. இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 8 மணி அளவில் தேவாலயத்திற்கு சென்று வருவதாக கூறி வீட்டிலிருந்து சுபினார் சென்றுள்ளார். ஆனால் அன்று இரவு ஆன பிறகும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த ஜெர்பின் உறவினர்கள் வீடுகளிலும், பல்வேறு இடங்களிலும் தேடிப் பார்த்துள்ளார். ஆனால் எந்த தகவலும் கிடைக்கவில்லை. சுபினா என்ன ஆனார்? எங்கு சென்றார்? என்பது குறித்து எந்த தகவலும் தெரியவில்லை. இதையடுத்து நித்திரவிளை போலீசில் ஜெர்பின் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். திருமணமான 5 மாதத்தில் புது பெண் மாயமான சம்பவம் உறவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## நாகர்கோவிலில்

# ஓடும் பஸ்ஸில் மூதாட்டியின் நகை திருட்டு கண்காணிப்பு கேமராக்கள் மூலம் போலீசார் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.17

நட்டாலம் பகுதியை சேர்ந்தவர் ஆன்சிலி (65). இவர் நேற்று முன்தினம் காலை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்குகண்பரிசோதனைக்கு வந்திருந்தார். அங்கு சிகிச்சை முடிந்து மீண்டும் ஊருக்கு செல்ல மருத்துவ கல்லூரி பஸ் நிறுத்தத்தில் இருந்து அரசு பஸ்ஸில் டெரிக் சந்திப்பு வந்து இறங்கினார்.அப்போதுஅவரதுகழுத்தில் கிடந்த மூன்றரை பவன் தங்க செயினை காணவில்லை. இது குறித்து நேசமணி நகர் காவல் நிலையத்தில் ஆன்சிலி புகார் அளித்தார். ஆனால் மூதாட்டியின்புகாரை உடனடியாக ஏற்காமல் நீண்ட நேரம் அங்கு மூதாட்டியை காக்க வைத்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து இந்த சம்பவம் வெளியில் பரவியதை அடுத்து புகார் ஏற்கப்பட்டு போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். ஆன்சிலி பயணம் செய்த பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்துள்ளது. கூட்ட நெரிசலைபயன்படுத்தியாரோகைவரிசை காட்டியுள்ளனர். அவர் பயணம் செய்த பகுதிகளில் உள்ளபஸ் நிறுத்தத்தில் உள்ள கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து வருகிறார்கள். கூட்டம் அதிகமாக உள்ள பஸ்கலில் பயணம் செய்யும்போது பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் என போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.

## அமைந்தகரை "அம்பா ஸ்கை வாக்" மாலில்

# புதிய கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் திறப்பு



சென்னை, ஜூன் 17

தமிழகத்தில் கோஆப் டெக்ஸ் நிறுவனம், கடந்த 1935ம் ஆண்டு தொடங்கப்பட்டு இதுவரை 144 கிளைகள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் சென்னை பன்னாட்டு விமான முனையத்தில் கோ ஆப்டெக்ஸ் கிளை திறக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சென்னை அமைந்தகரை ஸ்கைவாக் மாலில் அமைச்சர் விஜய் பாலாஜி கோ ஆப்டெக்ஸ் கிளையை திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறித் துறை முதன்மை செயலர் வெங்கடேஷ் உள்ளிட்ட துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து, கோஆப் டெக்ஸ் அதிகாரிகள் கூறும் போது,

"கோஆப்டெக்ஸ் புதிய ரகங்களான மகளிர் ஆயத்த ஆடை ரகங்கள், இன்டிகோ மற் றும் நவீன அச்சிடல் ஆடை தொகுப்புகள், டிஜிட்டல் முறை யில் அச்சிடப்பட்ட படுக்கை விரிப்புகள். மூங்கில் இழை மற்றும் இருவண்ண பூத்துண்டு ரகங்கள் ஆகியவை விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சில்லறை விற் பனை குறியீடாக ரூ.100 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது"என்றனர்.



# முதுகுளத்தூரில் வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) கூட்டம்

முதுகுளத்தூர், ஜூன் 17

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்தில் பசலி 1435 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) கூட்டம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி ஆணையர் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) வி. கங்காதேவி, வட்டாட்சியர் கோகுல்நாத், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் மரகத மேரி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

மேலும் மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன், வட்டத்தலைவர் ராஜேஸ்வரன், பொருளாளர் மணிமூர்த்தி, செயலாளர் சிவகுமார், வருவாய் ஆய்வாளர்கள் தினேஷ், பெரியசாமி, தனவேந்தன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிலம், பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்தில் பசலி 1435 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) கூட்டம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி ஆணையர் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) வி. கங்காதேவி, வட்டாட்சியர் கோகுல்நாத், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் மரகத மேரி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

மேலும் மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன், வட்டத்தலைவர் ராஜேஸ்வரன், பொருளாளர் மணிமூர்த்தி, செயலாளர் சிவகுமார், வருவாய் ஆய்வாளர்கள் தினேஷ், பெரியசாமி, தனவேந்தன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிலம், பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

# ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க மனு



ஈரோடு ஜூன் 17

கிராம பஞ்சாயத்து டேங்க் ஆபரேட்டர்கள், துப்புரவு பணியாளர் சங்கம் மற்றும் தூய்மை காவலர்கள் சங்க மாநில தலைவர் ஈ வி கே சண்முகம் ஈரோடு ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடம் ஒரு மனு கொடுத்து உள்ளார். அதில் கூறியிருப்பதாவது ஊராட்சி தூய்மை பணியாளர் மற்றும் டேங்க் ஆபரேட்டர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். பல வருடமாக ஒரே ஊராட்சியில் பணியாற்றும் ஊராட்சி செயலாளர்களை பணியிடம் மாற்றம் செய்து முறைகேடுகள் நடப்பதை தவிர்க்க வேண்டும்.சிறப்பு ஓய்வூதியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தூய்மை பணியாளர்களுக்கு ஓய்வூதியமாக ஒட்டுமொத்த தொகையாக ரூ 1 லட்சம் வழங்க வேண்டும். மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த மனு கொடுக்கப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# விடுதிகளில் சேர மாணவ மாணவிகள் விண்ணப்பிக்கலாம்




தஞ்சாவூர் ஜூன் 17

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 56 விடுதிகளில் சேர மாணவ மாணவி கள் விண்ணப்பிக்கலாம் .பள்ளி விடுதிக்கு வருகின்ற 18ஆம் தேதியும், கல்லூரி விடுதிக்கு ஜூலை 15ஆம் தேதி கடைசி நாள் ஆகும் தஞ்சாவூர்மாவட்டகலெக்டர் ரேவதி விடுத்துள்ள செய்தி குறிப் பில் கூறியிருப்பதாவது

தமிழக அரசின் சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிற்படுத்த ப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட் டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர் மாணவிகளுக்கு மொத்தம்56விடுதிகள்செயல்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு 24 விடுதி கள், பள்ளி மாணவிகளுக்கு 10 விடுதிகள், கல்லூரி மாணவர்களு க் கு 9 விடுதிகள், கல்லூரி மாணவிகளுக்கு 13 விடுதிகள் செயல்படு கின்றன.

பள்ளி விடுதியில் 4ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ மாணவி களும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவ மாணவிகள் சேர தகுதி உடையவர்கள் ஆவர்

இதில் சேர பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் 2 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்தி லிருந்து பயிலும் கல்வி நிலையத் தின் தொலைவு குறைந்த பட்சம் 8 கி.மீ க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவிகளுக்கு பொருந்தாது

தகுதியுடையவர்கள் விண்ணப் பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் அல்லது காப்பாளினி யிடம் இருந்தோ அல்லது கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்று ம் சிறுபான்மையினர் நல அலுவல கத்தில் இருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி விடுதிக்கு வருகின்ற 18ஆம் தேதிக்குள்ளும், கல்லூரி விடுதிக குள்ளும் ஜூலை 15ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள் அல்லது காப்பிளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்று ம் சிறுபான்மையினர் நல அலுவல கத்தில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மார்த்தாண்டம் அருகே

# டிரைவருக்கு அரிவாள் வெட்டு; 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம்,ஜூன். 17

மார்த்தாண்டம் அருகே பொன்மனைவிளை என்ற பகுதியை சேர்ந்தவர் ஜெனிஷ் செல்வகுமார் (40 ). வேன் டிரைவர். சம்பவ தினம் காரவிளை நூலகம் அருகே இவர் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த நல்லூர் பகுதியை சேர்ந்த ஜான் சவுந்தர் சிங் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் 3 பேருடன் அங்கு வந்து முன் விரோதம் காரணமாக அரிவாளால் ஜெனிசை சரமாரியாக வெட்டி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த ஜெனிசை அக்கம் பக்கத்தினர் ஆம்புலன்ஸ் மூலம் அவரை குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து ஜெனிஸ் செல்வகுமாரின் சகோதரனும் வக்கீலுமான எட்வின் ராஜகுமார் (50) என்பவர் மார்த்தாண்டம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் ஜான் சௌந்தர் சிங் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் 3 பேர் என நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



## தஞ்சாவூர் அடுத்துள்ள வல்லம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில்

# 96 மாணவ மாணவிகளுக்கு 11ம் வகுப்பு சேர்க்கை ஆணை; கலெக்டர் ரேவதி வழங்கினார்

தஞ்சாவூர் ஜூன் 17

தஞ்சாவூர் அடுத்துள்ள வல்லம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி யில் 96 மாணவ மாணவிகளுக்கு 11ம் வகுப்பு சேர்க்கை ஆணையை கலெக்டர் ரேவதி வழங்கினார்

10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வி ல் அரசு பள்ளிகளில் பயின்று தஞ்சாவூர் மாவட்ட அளவில் சிறப்பிடம் பிடித்த 48 மாணவர்கள் மற்றும் 48 மாணவிகள் என 96 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களு க்கு இந்தியாவில் உள்ள சிறந்த கல்லூரிகளில் மேற்படிப்பு படிக்கும் வகையில் நடத்தப்படும் போட்டி தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் சிறந்த ஆசிரியர்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு தஞ்சாவூர் அடுத்துள்ள வல்லம் பேரூராட்சி அரசு மாதிரி பள்ளியில் 11ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை கலெக்டர் ரேவதி வழங்கி பேசினார் அப்போது அவர் பேசியதாவது:

கல்வி மூலம் மாணவர்கள் தாங் கள் காணும் கனவினை அடைய முடியும் பெற்றோர்கள் உங்களது கனவுகளை நினைவாக்கும் இடத் தில் உங்களது பிள்ளைகள் தற் போது உள்ளனர். எனவே மாணவர் கள் தங்களது படிப்பின் மீது மிகுந்த அக்கறை கொண்டு படிக்க வேண்டும் .உங்கள் நோக்கத்தை நீங்கள் உறுதியாகக் கொண்டிருந்தால் அந்த இடத்தில் அந்த நோக்கம் உங்களை கொண்டு செல்லும்.

மாணவர்கள் அனைவரும் தங்க ளது எதிர்காலத்தை நினைவில் கொண்டு மாணவப் பருவத்தில் தங்களது செயல்பாடுகளை மேம் படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எதிர்காலம் நமது கனவினை உறுதி செய்யும். படிக் கும் காலத்தில் எத்தகைய கஷ்டம் இருந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொண்டு நமது படிப்பில் முழு ஈடு பாடு காட்ட வேண்டும்

மாணவ மாணவிகள் தங்கள் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் எதை நோக்கி நீங்கள் பயணம் செய்கிறீர்களோ அதற்கான முயற்சி சரியாக இருக்கும் பட்சத் தில் அது உங்கள் உங்களை நோக்கி பயணம் செய்யும். எனவே மாணவ மாணவிகள் அனைவரும் தாங்கள் தேர்ந்தெடுத்த நோக்கத் திற்காக சிறந்த முறையில் படித்து அந்த நோக்கத்தினை நிறைவு செய்ய வேண்டும் , என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பேபி, அரசு மாதிரி மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜபாண்டியன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்



## தஞ்சாவூரில்

# ஏடகம் அமைப்பின் 100வது சொற்பொழிவு

தஞ்சாவூர் ஜூன் 17

தஞ்சாவூரில் ஏடகம் அமைப்பின் ஞாயிறு முற்றம் 100வது சொற் பொழிவு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் தியாகராஜன் தலைமை வகித்தார் .தமிழ் பல்கலைகழகமுன்னாள்இலக்கியத்துறைதலைவர் குவே பாலசுப்பிரமணி யம் ஏடக எழுத்தறிவித்தவர் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் அவர் தனது உரையில் ஏடக பதிப்பித்து சங்க இலக்கியத்தை வெளிக் கொண்டிருந்த உ.வே.சாமி நாதையரின் பணி பாராட்டுக்குரி யது. அவரது தமிழ் பணியை ஆங்கில அரசும் பாராட்டியது. இதே போல் அரசன் சண்முகனார் தமிழுக்கு ஏராளமான தொண்டு களை ஆற்றியுள்ளார். பண்டித மணி கதிரேசன் செட்டியார், நா.மு.வே. நாட்டார் போன்றோரின் தமிழ் பணிகளை நாம் எண்ணி பார்க்க வேண்டும். தொடர்ந்து 8 ஆண்டுகளுக்கும் மேலாகச் சுவடி படிக்க பயிற்சி அளித்து வரும் முனைவர் மணி.மாறன் பணியைப்பிற இலக்கிய பணிகளிலும் ஒப்பிட முடியாது என்றார்

முன்னதாக ஏடகம் ஊடகப் பிரிவு பொறுப்பாளர் கரந்தை ஜெயக்கு மார் அனைவரையும் வரவேற்றார் நிறைவாக கவிஞர் திருநாவுக்கரசு நன்றி கூறினார் .

நிகழ்ச்சியில் கம்பன் கழக துணைத் தலைவர் இராம சந்திர சேகரன் தொகுத்து வழங்கினார்

## நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு

# பாதாள சாக்கடை மேன்ஹோல் வழியாக வெளியேறும் கழிவு நீர்

நாகர்கோவில்,ஜூன். 17

நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு தொடர்ந்து பாதாள சாக்கடை மேன்ஹோல் வழியாக கழிவு நீர் வெளியேறுவதால் பொதுமக்கள் அவதி அடைந்துள்ளனர்.

நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் பாதாள சாக்கடை மேன்ஹோல் வழியாக கழிவு நீர் வெளியேறுவது தொடர்ந்து நடந்து வருகிறது. மழைக்காலங்களில் மழை தண்ணீருடன் அதிக அளவு கழிவுநீர் வெளியேறி வருகிறது.

இந்த நிலையில் கலெக்டர் அலுவலகம் முன்புள்ள பாதாள சாக்கடை மேன் ஹோல் வழியாக அடிக்கடி கழிவு நீர் வெளியேறி வருகிறது. பாதாள சாக்கடையில் ஏற்பட்ட அடைப்பை மாநகராட்சி அதிகாரிகள்தலைமையில் ஊழியர்கள் சரி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் அதிக அளவு கழிவு நீர் வெளியேறியது. இதனால் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகினார்கள். இதனை தொடர்ந்துமாநகராட்சிமேயர்(பொறுப்பு) மேரி பிரின்சி லதா மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று கழிவு நீர் வெளியேறுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

பாதாள சாக்கடையில் ஏற்பட



அடைப்பைநீக்கும்வாகனத்தைகொண்டு வந்து அந்த அடைப்பை சரி செய்தனர். இது குறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியபோது, கலெக்டர் அலுவலக ஜங்ஷன் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை மேன்ஹோல் வழியாக நீர் வெளியேறுவதை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. பாதாள சாக்கடையில் எங்கு அடைப்பு உள்ளது என கண்டறிய அடைப்பைநீக்கும்வாகனத்தைகொண்டு வந்து பார்த்த போது, கலெக்டர் அலுவலக ரவுண்டான பகுதியில் பாதாள சாக்கடை குழாய் உடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உடைப்பால்தான் கழிவு நீர் வழிகிறது. ரவுண்டானாவில் கீழ்ப்பகுதியில் பாதாள சாக்கடை குழாயில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்தால் கழிவு நீர் வெளியேறுவது முற்றிலும் தடைபடும். உடைப்பை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது என்றார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.